மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு ஆகஸ்ட் 30–09–2020 ம் தேதி புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் செப்டம்பர் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்**

2. பண்ணுருட்டி நகராட்சி– தெருவிளக்குகளில் மின் சேமிப்பு (ம) தூய்மை இந்தியா திட்டம் மின் பயனீட்டு அளவை தணிக்கை செய்தல் (ம) தூய்மை இந்தியா திட்ட பணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பரப்புரையாளர்கள் (ம) ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்வது விளம்பரக் கட்டணம், விளம்பரம் செய்ததை பண்ருட்டி நகராட்சி விளம்பரத் தொகை ரூ. 14,000 (பதினான்காயிரம் மட்டும்) பட்டியல் தொகை செலுத்த தாம்பரம் நகராட்சி (பெரு நகராட்சி) பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) 27.05.2020–ல் பண்ருட்டி நகராட்சிக்கு கடிதம் வந்துள்ளது. மேலும், விளம்பரக் கட்டணம் ரூ.14,000 (பதினான்காயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.விளம்பரம் செய்த இத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3 . பண்ணுருட்டி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைத் திட்டம் 2020–2021ன் கீழ் குறிப்பிட்டுள்ள சாலைகள்

1. வார்டு எண் 17. வீராணம் சாலை ( லிங்க் ரோடு முதல் இலுப்பை தோப்பு) தார்சாலை அமைத்தல்
2. வார்டு எண் 17 நேதாஜி நகர் ( லிங்க் ரோடு முதல்) தார்சாலை அமைத்தல்
3. வார்டு எண் 10 ஜெயப்பிரியா நகர்
4. வார்டு எண் 18 எம்.ஜி.ஆர் நகர் தார்சாலை அமைத்தல்
5. வார்டு எண் 21 காமராஜ் நர் (EB காலனி ) தார்சாலை அமைத்தல்
6. வார்டு எண் 27 சீலக்காரத்தெரு தார்சாலை அமைத்தல்
7. வார்டு எண் 29 சத்தியமூர்த்தி தெரு மேற்கு பகுதி குறுக்கு தெருக்கள் தார்சாலை அமைத்தல்
8. வார்டு எண் 30 வ.ஊ.சி தெரு முதல் கெடிலம் நீரேற்று நிலையம் வரை
9. வார்டு எண் 32 இருளன்குப்பம் தெற்கு தெரு தார்சாலை அமைத்தல்
10. வார்டு எண் 28 திடீர் குப்பம் தார்சாலை அமைத்தல்
11. வார்டு எண் 16 வீரட்டாணேஸ்வரர் கோயில் சாலை முதல் மேலப்பாளையம் சுடுகாடு வரை தார்சாலை அமைத்தல்
12. வார்டு எண் 2 விழமங்கலம் சுடுகாடு சாலை தார்சாலை அமைத்தல்
13. வார்டு எண் 27 காந்தி நகர் காலனி சுடுகாடு சாலை ஆகிய பகுதிகள் தார் சாலை அமைத்தல்

மேற்படி சாலைகள் அமைப்பதற்கு ரூ. 200.00. இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 17349 / 2019 / இ3 நாள் 14.07.2020 ன்படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான இரண்டு உறை முறையில் (Two cover system) 13.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததார்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

1) திரு.வி.சுரேஷ்பாபு, 8A, வள்ளலார் நகர், பகவதியம்மன்கோயில் தெரு, மஞ்சகுப்பம், கடலூர்.

2) திருவா. ஸ்ரீ கற்பக விநாயகர் கான்ட்ராக்டர்ஸ், 8A. காவேரி நகர், S.N.சாவடி நகர், கடலூர்.

வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 09.09.2020 அன்று விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | |
|---|---|---|---|
| | | மதிப்பீட்டு தொகைக்கு கூடுதல் | மதிப்பீட்டு தொகைக்கு குறைவு |
| 1. | திரு.வி.சுரேஷ்பாபு, 8A, வள்ளலார் நகர், பகவதியம்மன்கோயில் தெரு, மஞ்சகுப்பம், கடலூர். | 0.59% | – |
| 2. | திருவா. ஸ்ரீ கற்பக விநாயகர் கான்ட்ராக்டர்ஸ், 8A. காவேரி நகர், S.N.சாவடி நகர், கடலூர். | – | 0.11% |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களில் திருவா. ஸ்ரீ கற்பக விநாயகர் கான்ட்ராக்டர்ஸ், அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11 % சதவிகிதம் குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதியை பெற்று பணி ஆணை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.767 /2020/இ1**

4. இந்நகராட்சியில் வருவாய் நிதி **2020–21**–ம் ஆண்டின்கீழ் நகராட்சிக்கு சொந்தமான **33** வார்டுகளில் உள்ள **4 x 40** வாட்ஸ் குழல் விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். **569** நாள் **31.08.2020**–ல் அனுமதி வழங்கிஉள்ளதற்கிணங்க **02.09.2020**–ம் தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் /குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | M/s. ஸ்ரீமல்லிகா எலக்ட்ரிக்கல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், பண்ருட்டி. | 15.62 | 0.09 % குறைவு |
| 1. | M/s. ஸ்ரீமுருகன் எலக்ட்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், பண்ருட்டி. | 15.62 | 0.37 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு.**

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. ஸ்ரீமல்லிகா எலக்ட்ரிக்கல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், பண்ருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட **0.09%** அதிகம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 0403 /2020/இ2**

5. பண்ருட்டி நகராட்சி வார்டு எண். 28–ல் அமையப்பட்டுள்ள அன்பு நகர் என்னும் இடத்தில் புதியதாக Layout ஒன்று உதயமாகி உள்ளது. அந்த நகருக்கு காலிமனை விதிக்க வேண்டி உள்ளதாலும், Layout Approval வழங்க வேண்டி உள்ளதாலும் அந்நகருக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதியும் Layout Approval செய்வதாலும் அந்நகரினை கணிணியில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது. ( காலிமனை 'B' மற்றும் சொத்து வரி 'B' Zone –ல் கணிணியில் உருவாக்கலாம்)

**அலுவலகக் குறிப்பு.– 1.**மன்றம் அனுமதிக்கலாம்.

1) பொதுமக்கள் நலன்கருதி அன்புநகர் என்னும் Layout–க்கு Zone B காலிமனை வரி மற்றும் Zone B சொத்து வரி விதித்து வரிவசூல் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** பண்ணுருட்டி நகராட்சியில் பணிபுரியும், தகுதியான துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஓட்டுனர்கள் மற்றும் இதர அலுவலக பணியாளர்களுக்கு 2020–2021–ம் ஆண்டிற்கான சீருடைகள் தீபாவளி பண்டிகைக்கு முன்னரே வழங்கிடவும், சீருடைகளை கடந்த ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் கடலூர் 'காதி கிராப்ட்' நிறுவனத்தில் வாங்கிடுவதற்கும், தையற்கூலி வழங்குவதற்கும் அனுமதி கோருவதுடன் உத்தேச செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு அனுமதியும் வழங்கிட கோரி குறிப்பு வழங்கி உள்ளார். எனவே, தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு சீருடைகளை தீபாவளி பண்டிகைக்கு முன்னரே வழங்க வேண்டி உள்ளதினல் சீருடைகள் வாங்கி வழங்கிடவும், தையற்கூலி வழங்கிடவும் உத்தேச செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்றப் பொருள் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1212 / 2020 / எச்1**

7. பண்ணுருட்டி நகராட்சிக்கு தமிழக அரசால் அறிவிக்கக்கப்பட்ட 2020–21 நிதி ஆண்டிற்கு மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் (Announcement Fund) பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட குட்டை தெரு வார்டு எண் 11. சர்வே எண் 9/5 குளத்தினை தூர் வாரி ஆழப்படுத்தி கரைகளை உறுதிபடுத்துல் பணியினை மேற்கொள்ளுதல் பணிக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் கட்டிடவடிவமைப்பு (Structural design ) கேட்கப்பட்டதை தொடர்ந்து தியாகராயர் பாலிடெக்னிக் கல்லூரி, சேலம். அவர்கள் மூலம் கட்டிடவடிவமைப்பு பெறவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. 30,000.00 மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1**.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிக்கு பட்டியல் வரப்பெற்றதும் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1703 /2019/இ1

8. வடகிழக்கு பருவமழை தற்போது மழை பொழிந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பண்ணுருட்டி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு பகுதியில் உருவாகும் மழைநீர் வார்டுகளில் உள்ள கால்வாயில் இருந்து வரப்பெறும் அனைத்து நீர்களும் வாலாஜா வாய்க்கால் மூலம் வழிந்தோட வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில் வாலாஜா வாய்க்காலில் புல், பூண்டு, மரம், செடி கொடிகள், கோரைப்புல் ஆக்கிரமித்து உள்ளதால் மழை நீர் வழிந்தோடுவதால் தேக்கம் ஏற்பட்டு பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்படுகிறது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதியும் வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால் அதன் (வாய்க்கால்) ஆரம்ப பகுதியான வார்டு எண்.1 ஆண்டிக்குப்பம் முதல் வார்டு –2 விழமங்கலம் பகுதி, வார்டு–3 விழமங்கலம் காலனி வழியாக வார்டு எண்.5–ன் வழியாகவும் வார்டு எண். 8,10,11 வார்டு எண். 15, 16–ன் மழைநீரை அப்புறப்படுத்தும் விதமாக திருவதிகை பகுதியுடன் வாலாஜா பகுதியில் மேற்படி வாய்க்கால் முழுவதும் சுத்தம் செய்திட வேண்டியுள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் நகரத்தின் சுகாதாரத்தை மேம்படுத்திட இப்பணியினை செய்திட அவசர, அவசியம் கருதி பிரதான வாய்க்கால் சுத்தம் செய்து மழை காலத்தில் உருவாகும் தண்ணீர் தேக்கமின்றி சென்றிட வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்திட உத்தேச செலவினம் கடந்த ஆண்டு ஒப்பிட்டு ரூ.10.00/– லட்சம் (பத்து லட்சம்)–க்கும் நகரமன்ற அனுமதி MCR No.570 நாள். 26.08.2020 நிர்வாக அனுமதி பெறப்பட்டு பின்பு 29.09.2020–ல் அப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பி ன்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வாடகை ஒரு மணி நேரத்திற்கு | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. என்.ஆர்.முருகன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>73, மெயின் ரோடு, புதுப்பேட்டை, | ரூ. 1675/– | செலான் எண்.<br>4578 / 29.09.2020<br>ரூ.10,000/– |
| 2 | ஆர்.ராம்குமார்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்<br>84, பிள்ளையார் கோவில் தெரு,<br>பெரிய எலந்தம்பட்டு, பண்ருட்டி வட்டம். | ரூ. 1600/– | செலான் எண்.<br>4580 / 29.09.2020<br>ரூ.10,000/– |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2–ல் கண்டுள்ள திரு. ஆர்.ராம்குமார், நகராட்சி ஒப்பந்ததாரர், பெரிய எலந்தம்பட்டு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ள காரணத்தினால் அன்னாருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றப் பொருள் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1206/2020/எச்1**

9 .திரு. எஸ்.விஜயகுமார் என்பவருக்கு வார்டு எ, பிளாக் 32, டி.எஸ்.நெ. 5ஏ, பகுதி (பழைய சர்வே எண். 2139 எல்) வரன்முறை மனைப்பிரிவு கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ. (விம) எண். ஆர்.490/2019 என எண்ணிடப்பட்டு இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. மனைப்பிரிவு உரிமையாளர் நிதிநிலை காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழக அரசு அரசாணை எண். 100 வீட்டு வசதித்துறை நாள். 01.07.2019–ன்படி நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் 20.078.2020–ல் உதவி இயக்குநர், கடலூர் அவர்களுக்கு தெரிவித்ததின் பேரில் ரூ.100/– முத்திரைத்தாளில் கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்கள் இம்மனைப்பிரிவில் உள்ள சாலை, பூங்காவினை 04.09.2020–ல் ஆவண எண். 2884/2020–ன்படி தானமாக பெற்றுள்ளார். அதன் பத்திரபதிவு நகலை மனைப்பிரிவு உரிமையாளர் சமர்ப்பித்துள்ளார். எனவே, மனுதாரரின் மனைப்பிரிவினை ஏற்றுக் கொண்டு மனைப்பிரிவு வரன்முறை செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**கோ.எண். /2020/எப்1**

10. பண்ணுருட்டி நகராட்சியில் 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளான உடைப்புகள், மற்றும் பழுதுகள் சரி செய்யவும், சாலைகளை தற்காலிகமாக சீர் செய்யவும், பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளான குடிநீரை தங்குதடையின்றி வழங்கிட மின்தடை ஏற்படும்போது நகராட்சிக்குட்பட்ட 18 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் நிரப்ப ஜென்செட், சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய JCB இயந்திரங்களை வாடகைக்கு பயன்படுத்தவும் மற்றும் தாழ்வான பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் குடியிருப்புகளில் தேங்கும் மழைநீரை போர்க்கால அடிப்படையில் உடனுக்குடன் வெளியேற்றிட ஆயில் இன்ஜின் மற்றும் டீசல் இன்ஜின் மரம் அறுக்கும் இயந்திரம் பெறுவதற்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.00–ம் (மூன்று லட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். /2020/இ1**

11 இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2020–21–ம் ஆண்டின்கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 விழமங்கலம் திரௌபதியம்மன் கோவில் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து 10 HP நீர்மூழ்கி மோட்டார் பொருத்தும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 524 நாள். 31.03.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.09.2020–ல் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. ஆர்.ராம்குமார்,<br>64, பிள்ளையார் கோவில் தெரு,<br>பெரிய எலந்தம்பட்டு, பண்ருட்டி. | 5.00 | 0.43% குறைவு |
| 2. | திரு. என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு,<br>புதுப்பேட்டை. | 5.00 | 2.32% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆர்.ராம்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.43% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 607 / 2020 / இ2

12. இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2020–21–ம் ஆண்டின்கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 வரையிலுள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளிலுள்ள நீர்மூழ்கி மோட்டார்களில் உள்ள UG Cables பலதரப்பட்ட விட்டமுள்ள PVC GI Pipe–ல் ஏற்படு பழுதுகளை ஆண்டு பராமரிப்பு (Annual Maintenance) செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 533 நாள். 29.04.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.09.2020–ல் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. ஆர்.ராம்குமார்,<br>64, பிள்ளையார் கோவில் தெரு,<br>பெரிய எலந்தம்பட்டு, பண்ருட்டி. | 10.00 | 0.27% குறைவு |
| 2. | திரு. என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை. | 10.00 | 0.59% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆர்.ராம்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.27% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 645 / 2020 / இ2

13. இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21–ம் ஆண்டின்கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட தெரு மின்விளக்குகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் தருவித்து வழங்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 554 நாள். 31.07.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.09.2020–ல் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | M/s. மல்லிகா எலக்ட்ரிக்கல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், போலீஸ் லைன், பண்ருட்டி. | 5.00 | 0.23% குறைவு |
| 2. | திரு. என்.ஆர்.முருகன், 72, மெயின் ரோடு, புதுப்பேட்டை. | 5.00 | 0.41% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. மல்லிகா எலக்ட்ரிக்கல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், போலீஸ் லைன், பண்ருட்டி. ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.23% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதைஏற்றுமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 607 / 2020 / இ2

14 இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2020–21–ம் ஆண்டின்கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32, இருளன்குப்பம் ஆழ்துளை கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பைப்லைன் அமைத்தல், வார்டு எண்.02 விழமங்கலம் நகராட்சி துவக்கப்பள்ளியிலிருந்து வார்டு எண்.03 விழமங்கலம் வ.உ.சி. நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பைப் லைன் அமைத்தல், வார்டு 26, மணி நகர் உரக்கிடங்கிலிருந்து பிரதான குடிநீர் குழாய்க்கு இணைப்பு வழங்குதல் மற்றும் வார்டு எண்.12 செட்டிப்பட்டரை காலனி முதல் அசோக் நகர் வரை குடிநீர் குழாய் அமைத்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 556 நாள். 31.07.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.09.2020–ல் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. ஆர்.ராம்குமார், 64, பிள்ளையார் கோவில் தெரு, பெரிய எலந்தம்பட்டு, பண்ருட்டி. | 10.00 | 0.10% குறைவு |
| 2. | திரு. என்.ஆர்.முருகன், 72, மெயின் ரோடு, புதுப்பேட்டை. | 10.00 | 0.85% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.ஆர்.ராம்குமார்,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.10% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 1057 / 2020 / இ2

15. இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2020–21–ம் ஆண்டின்கீழ் கெடிலம் ஆற்றுப் படுகையிலிருந்து வ.உ.சி. தெருவிற்கு குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி மற்றும் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 25, பண்ருட்டியார் நகர், வார்டு.26 பிருந்தாவனம் நகர். வார்டு 28 திடீர்குப்பம், முத்தையா நகர், விஸ்வநாதன் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 566 நாள். 31.07.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.09.2020–ல் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. ஆர்.ராம்குமார்,<br>64, பிள்ளையார் கோவில் தெரு,<br>பெரிய எலந்தம்பட்டு, பண்ருட்டி. | 5.00 | 0.25% குறைவு |
| 2. | திரு. என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை. | 5.00 | 1.78% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.ஆர்.ராம்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.25% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 607 / 2020 / இ2

16. பண்ணுருட்டி நகராட்சி வார்டு எண் 3 விழமங்கலம் வ.ஊ.சி நகரில் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதாக பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி வார்டு எண் 3 விழமங்கலம் வ.ஊ.சி நகர் மாரியம்மன் கோயில் அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.5.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1 .மன்றம் அனுமதிக்கலாம்.

2.குடிநீர்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையை குடிநீர் நிதியிலிந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.

( ந.க.எண்:-1389/இ2/2020 )

இடம் –பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 30–09–2020

ஆணையாளர் / தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி.